## உள்ளூராட்சி தேர்தலும் தார்மீக அரசும்

தர்மிஸ்டர் அரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நடத்தாத உள்ளூராட்சி தேர்தலை தான் நடத்தியதாகவும் யூ.என்.பி. கட்சியையே கடந்த பொதுத் தேர்தலின் போது மக்கள் பெரும்பான்மை வாக்குகளை அளித்து தெரிந்தெடுத்திருப்பதாகவும் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றது. அதே நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் ரத்னசிறி விக்ரமநாயக்க பத்திரிகைக்கு விட்ட அறிக்கையில் கொழும்பில் ஸ்ரீ. ல. சு. க. 100% வெற்றியடைந்திருப்பதாக கூறியுள்ளார். 69ம் ஆண்டு 6 ஆசனங்களை பெற்றதாம் இம் முறை 12 ஆசனங்களை பெற்றிருப்பதாக கூறி தமக்கு கிடைத்தது வெற்றியே என்று விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை. என்று கூறுவதுபோல் திருப்திபடுகின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப் பகுதியில் பெரும்பான்மை அங்கத்தவர்கள் உள்ளூராட்சி தேர்தலில் பெற்றதன் மூலம் தமிழ் மக்கள் தம்மை அங்கீகரித்திருப்பதாகவும் தானே தமிழ் மக்களின் ஏக தலைவன் என்று மார்தட்டிக் கொள்கின்றது. தமிழ் ஈழத்தை வைத்து எவ்வளவு காலம்தான் காலம் தள்ளுவர்கள் என்று பார்ப்போம்! தொண்டமான் வழமைபோல் இக்குட்டி தேர்தலில் மலையக மக்களை யு.என்.பி.யில் இணைத்ததன் மூலம் தனது உண்மையான வர்க்க சுபாவத்தை காட்டி விட்டார். மக்கள் விடுதலை முன்னணியினர் 14508 வாக்குகளைப் பெற்று பாரம்பரிய இடதுசாரியினை மக்கள் நிராகரித்து. ம.வி.மு.வை அங்கீகரிப்பதாக பீத்திக் கொள்கின்றனர். பீட்டர் என் எம்கள் தங்களது தோல்வியை ஒத்துக் கொண்டு மௌனியாக இருக்கின்றனர். தேர்தல் வெற்றிகள் இவ்விதமிருக்க அதி உத்தமரின் அரசாங்கமானது உலக வங்கியில் எமது நாட்டை அடகு வைப்பதற்காக அண்மையில் வெளிநாட்டிலிருந்து வரவிருக்கும் உலக வங்கி குழுவை திருப்திப் படுத்த சகல மானியங்களை வெட்டுவதற்கு திட்டமிட்டு வருகின்றது ஏற்கனவே அரிசி கூப்பன் பறிபோய்விட்டது. மிக விரைவில் மாவின் விலை ரூபா 1.80 சதமாக உயரலாம். மண்ணெண்ணெய்யும் கூட கூடலாம். அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி முடிக்கும் வரை பொருட்களின் விலையை கூட்டாமல் இருந்தது. மக்களை ஏமாற்றுவதற்கான கபட நாடகமே யாகும். குட்டித் தேர்தலும் பொதுத் தேர்தலைப் போலவே பெருந்தேசிய குறுகிய தேசியவாதிகளது வெற்றியாகவும் பாரம்பரிய இடதுசாரிகளின் தோல்வியாகவும் முடிந்துள்ளது.

# விடிவு

ஒளி 2ι விடிவு 1 ஜூன் 1979 50 சதம்

## டயரி

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1979-7-17
PERIODICALS DIVISION

### பெண்களின் சமவுரிமை இலங்கையில் எத்தனை விதம்?

குறைந்தபட்ச நாட் சம்பளம் ஆகஸ்டு 78

| உற்பத்தியும் தொழிலும் | ஆண் ரூ. ச. | பெண் ரூ. ச. | வேறுபாடு விகிதத்தில் |
|---|---|---|---|
| ஓட்டு, வீங்கான் தொழில் | 9.63 | 8.46 | 12 |
| தென்னம் பொருள் | 9.19 | 7.60 | 17 |
| தும்புத் தொழில் | 8.74 | 8.24 | 5.7 |
| தீப்பெட்டி | 9.09 | 8.31 | 8.7 |
| நெற்குற்றுதல் | 7.70 | 5.93 | 22 |
| இறப்பர் (வெளிநாட்டு ஏற்றுமதி) | 11.46 | 10.40 | 9.2 |
| புகையிலை | 7.88 | 7.00 | 11 |
| இறப்பர் பிளாஸ்டிக் பொருட்கள் | 10.94 | 9.19 | 16 |
| **பெருந்தோட்ட மற்றும் விலை பொருட்கள்** | | | |
| தேயிலை | 8.83 | 6.66 | 24 |
| இறப்பர் | 8.44 | 6.48 | 23 |
| தேங்கு | 8.44 | 6.26 | 25 |
| ஏலம் | 5.77 | 4.20 | 15 |
| கொக்கோ, மிளகு | 7.58 | 5.51 | 27 |

(நன்றி: 'காந்தா ஹண்ட'' (பெண்கள் குரல்) 1979)

## பின்னோக்கிப் பார்க்கின்றோம்

இன்று பத்திரிகை ஒன்றை நடாத்துவது ஒரு காத்திரமான விடயமாகும் என்பதை எமது அனுபவம் கூறுகின்றது. அதுவும் கொள்கை ரீதியாக மக்களுக்குத் தேவையானவற்றை அவர்களது மொழியிலேயே முன்வைக்க முற்படும்போது, பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இன்று பத்திரிகை என்ற பெயரில் வரும் குப்பைக் கூலங்களுக்கு பழக்கப்பட்ட மக்கள் மத்தியில் தரமான பத்திரிகைகளின் வாசகர் எண்ணிக்கை சொற்பமாகவே காணப்படுகின்றது.

மாதம் ஒரு பத்திரிகை வெளியிட முற்பட்ட நாம் கடந்த ஒரு வருட காலத்தில் நான்கு இதழ்களை மாத்திரமே சிரமங்களுக்கு மத்தியில் வெளியிட முடிந்தது. இதற்கு விடிவு எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சனையே காரணமாகும். மிக மலிவான விலையில் அச்சகங்கள் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைக்கும் அச்சக உரிமையாளர்களும் உணர்வு பூர்வமாக பத்திரிகையை வெளியிட உதவுகின்றார்களில்லை. இதனால் தொழில் நுட்ப பிழைகளும், காலதாமதமும் சீரான ஒழுங்கமைப்பின்மையும் தவிர்க்க முடியாததாகின்றது. அதுவும் பத்திரிகைத் துறையில் எமக்கு முன் அனுபவமின்மையும் கடந்த இதழ்களின் குறைபாடுகளுக்கு காரணமாகும். அவற்றை அனுபவ ரீதியாக கற்றுக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் குறைபாடுகளின்றி விடிவை வாசகர்களுக்கு தர முயற்சிக்கின்றோம்.

(4ம் பக்கம் பார்க்க)

# லேக்ஹவுஸ் பத்திரிகையின் திருகுதாளம்

மே 15ந் திகதி ''தினகரன்'' பத்திரிகையில் சன்சோனி கமிஷன் முன்னிலையிலே முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஸ்ரான்லி சேனநாயக்க அளித்த வாக்கு மூலம் கொலை புரட்சி கிளர்ச்சிகளில் தமிழ்ப் பிரதேசங்களான வடக்கு கிழக்கு சம்பந்தப்பட்டிருக்க வில்லை என்ற தலைப்பில் வெளியானது. அச் செய்தி தமிழ் மக்களுக்கு நற்சான்றிதழ் வழங்குவதைப் போலவும், வடக்கு மக்களின் கொந்தளிப்புக்கு பொலிசாரே காரணம் என்று ஒத்துக் கொள்வதைப் போலவும், அமைந்திருந்தது. பொலிசாரைப் பற்றிய புகார்கள் தமக்குக் கிடைத்ததாக ஒத்துக் கொண்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் ''போதுமான பயிற்சியின்மையையும், சேர்த்துக் கொள்ளப்பட்டதிலுள்ள முறையோடு சமுதாயத்தில் பிரதிபலித்த குறைபாடுகளும் ஒரு சில பொலிசாரிடையே ஒழுக்கக் குறைவுக்குக் காரணம்'' என்று குறிப்பிட்டதை வாசிக்கும் போது எந்த வாசகரும் பொலிசாரும், அரசாங்கமும் தமிழ் மக்களின் பிரச்சினையை இப்போது நேர்மையோடு உணரத் தொடங்கி உள்ளன என்றே நினைப்பர்.

ஆனால் அதே தினத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆங்கிலப் பத்திரிகையான ''த சிலோன் டெயிலி நியூஸ்'' ''ஐ. ஜீ. பீ யின் மகன் கல்கந்தாவில் வைத்து மிரட்டப்பட்டார்'' என்ற தலைப்பிலே இவ் வாக்குமூலத்தை பிரசுரித்திருந்தது. ''வடக்கின் சம்பவங்கள் யாவும் நேரடியாக அரசாங்கத்திற்கு எதிராகவே திசை திருப்பப் பட்டிருந்தன. அங்கு கலவரம் இடம்பெற்ற காரணத்தினாலேயே பொலிசார் தலையிட நேர்ந்தது'' (எந்த முட்டாள் பொலிஸார் மீது குறை கூறினான்... அவர்கள் தமது ''கடமையை'' அல்லவா செய்திருக்கிறார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது மாத்திரமல்ல பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் யாவும் அபாண்டம், தமிழ் மக்கள் செய்வதெல்லாம் அநியாயம் என்ற தொனியில் பல சம்பவங்களும் கூறப்பட்டிருந்தன. உதாரணத்திற்கு சில:-

முன்னாள் ஐஜீபீ வாக்குமூலமளிக்கிறார். ''...பொலிசாரினால் ஒரு கன்னிப் பெண் கற்பழிக்கப்பட்டதாக கூறப்படும் ஒரு சம்பவம் சம்பந்தமாக புகார் ஒன்று கிடைத்தது. இது பற்றி பாராளுமன்றத்தில் கூட பிரஸ்தாபிக்கப் பட்டது. உடனே இது சம்பந்தமான விசாரணை மேற் கொள்ளப்பட்டது. ஆனால் அந்த கன்னிப் பெண் தான் கற்பழிக்கப்பட்டதை முற்றாக மறுத்தார்'' (இப்படி எல்லாம் எமது கண்ணியம் மிக்க பொலிசார் மீது களங்கம் கற்பிக்கலாமா?)

''...1979 ஆகஸ்ட் 16ல் நான் யாழ் விஜயம் மேற்கொண்டிருந்த போது கூட்டுறவு சங்கக் கடை ஒன்று கொள்ளை அடிக்கப்படுவதைக் கண்டேன். அது சம்பந்தமாக ஒருவர் பிடிபட்டார். (ஆகா பொலிஸாரின் பெருந்தன்மையே பெருந்தன்மை!)

தமிழ் பத்திரிகையிலும் ஆங்கில பத்திரிகையிலும் ஒரே செய்தி எவ்வாறு உருமாற்றமடைகிறது என்று அதிர்ச்சியாக இருக்கிறதா? அடுத்ததையும் கேட்டுவிட்டு ஆச்சரியப்படுங்கள். அதே நிறுவனத்தால், அதே செய்தியை அதே தினத்தில் வெளியிட்ட சிங்களப் பத்திரிகையான ''தினமின''வின் தலைப்பு என்ன தெரியுமா? ''வடக்கிலே விசாரணை மேற்கொள்ளும் பொலிசாரை தமிழர் ஓயாமல் தொல்லை படுத்துகிறார்கள்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான லேக்ஹவுஸ் பத்திரிகைகள் ஒருபுறத்தில் தமிழ் பத்திரிகையால் தமிழர்களை தடவிக் கொடுத்தபடி, மறுபுறத்தில் சிங்கள பத்திரிகையால் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டிவிடுகிறது என்பது இதிலிருந்து புலனாகவில்லையா? இது என்ன? இதுதான் ''தர்மிஸ்டர் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கடைபிடிக்கும் தாராளக் கொள்கை,''

பல துளிகள் கூடி பேராளி ஆவதுபோல் பரந்தநத்தில் பாரெங்கும் சங்கமிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவின் ஒளியிலே!

## உள்ளூராட்சி தேர்தல்கள்

சமீபத்திய தேர்தல் இன்றைய அரசியல் நிலை யூ.என்.பி தமிழர் விடுதலை கூட்டணி என்ற இரு முகாம்களாக ஆகியுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. தமிழர்களிடம் இருந்து நாட்டை பாதுகாக்கவும், சிங்கள பௌத்த தர்மத்தையும், சிங்கள மொழியையும் சிங்கள இனத்தையும் பாதுகாக்கவுமே சிங்கள மக்கள் யூ. என், பிக்கு வாக்களித்துள்ளார்கள். யூ. என். பியின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள், ஏழைகளின் வயிற்றில் அடித்த செயல்கள், அந்நியர்களுக்கு ஆதரவான நடவடிக்திககள் இவை எவற்றையும் கணக்கில் எடுக்காமல் சிங்கள மக்களில் பெரும் பான்மையினர் (தேர்தல் நடந்த இடங்களில்) யூ. என். பியின் இனவாத நடவடிக்கையையே கணக்கில் எடுத்துள்ளார்கள். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு சக்திகள் இதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை சிங்கள மக்கள் மதிக்கவில்லையானல் தமது உரிமையை பெற்றுக் கொள்வதற்காக ஒரு அடிதானும் முலனேற முடியாது.

யூ. என். பிக்கும், குமார் பொன்னம்பலத்திற்கும் வடக்கில் கிடைத்த தமிழ் வாக்குகள் தமிழ் மக்களுக்கு கிடைத்த தோல்வியாகும்.

இதன் காரணங்கள் என்ன?

1. தமிழர் விடுதலை கூட்டணி தலைமையில் விடுதலை விரும்புவோர்களும், போராளிகளும் மிக குறைவாக இருந்தல் இவர்கள் சுயநலமிக்க தனிநபர் நடவடிக்கைகள் மக்களின் ஒரு பகுதியை எதிரியின் பக்கம் தள்ளியுள்ளது.

2. தலைமையில் பெரும்பான்மையினர் உள்ளூர் சாதி' வெறியர்களாக இருந்தல். இது 'தாழ்த்தப்பட்ட சாதி' என கருதப்படுவோரை கூட்டணி தன்னுடன் இணைப்பதை தடை செய்கிறது.

3. இன அடக்கு முறைக்கு எதிராக தமிழ் மக்களை வெகுஜன நடவடிக்கைகளில் கூட்டாக ஈடுபடுத்துவதற்கு பதிலாக மேடைப்பேச்சு வீரர்களாக மாத்திரம் இருந்தல்.

4. தமிழ் மக்களின் போராட்ட உணர்வை சரியான திசையில் திருப்புவதற்கு பதிலாக தவறான வழியில் திருப்பல்.

எவ்வளவுதான் பெரும் பிரச்சாரத்தையும் அறிமுகத்தையும் பெற்றிருந்தாலும் கூட மக்களின் அன்றாட வாழ்க்கை தேவைகளுடன் மக்களின் அன்றாட போராட்டங்களுடன் அவர்களின் உணர்வுகளுடன் இணையாத பட்சத்தில், மக்களின் இயக்கமாக மாற முடியாது என்பதை, ஜே. வி. யின் தோல்வி காட்டுகின்றது. இப் போதனையை அடக்கப்பட்ட தேசிய இனங்கள் மறந்துவிடலாகாது.

# இராகலை சம்பவத்தின் எதிரொளி!

இராகலைப் பகுதியில் இனவெறியர்களின் தான்தோன்றித்தனத்திற்கு அப்பகுதி மக்கள் நல்ல பாடம் புகட்டியதைப் பற்றிய செய்தி ஒன்றை "விடிவு" வெளியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

காடையர்களின் அட்டகாசத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தவிர்க்க முடியாத நிலைமையில் அவர்கள் நடாத்திய நியாயமான, வீரப் போராட்டத்தைக் காரணமாக வைத்து இனவாதத்தைத் தூண்டுவதற்கு தீய சக்திகள் முயன்றன. இதன் எதிரொலியா ஹப்புதளை கெத்த பகுதியில் சில அப்பாவி தமிழர்களின் வீடுகள் தீக்கரையாகின. பல தமிழ்க் குடும்பங்கள் அப்பகுதியைக் காலி செய்து விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளன.

# "வடக்கில் மட்டும் கொள்ளைகள்"

மக்களும், பொலிஸாரும், அரசியல் வாதிகளும் இவ்விதம் அலறுகிறார்கள். மக்களும், பொலிஸாரும் எதற்காக அலறுகிறார்கள். அதை ஸி. ஐ. டி. யே கண்டு பிடிக்கட்டும். ஆனால் அரசியல்வாதிகள் ஏன் இப்படி ஓலமிட வேண்டும். யாழ்பாண தமிழர்கள் மத்தியில் இக் கொள்ளைகள் அதிகமாக உள்ளன என்று யூ. என் பி. யும், சிங்கள தருண சமித்திய போன்ற இனவாத ஸ்தாபனங்களும் அலறுவது எதற்காக?

கொள்ளைகள் இலங்கை எங்கனும் நடைபெறுகின்றன வங்கிக் கொள்ளைகள் கூட தெற்கிலேயே இதுவரை கூடுதலாக நடைபெற்றுள்ளது, சமீபத்தில் அநுராதபுரத்தில் வழிப்பறிகளின் மூலம் 78,000 ரூபா கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறதாம். இதில் பொலிசாருக்கும் தொடர்பாம். சில மாதங்களுக்கு முன்பு தெற்கில் கச்சேரியிலும் கொள்ளை நடந்ததாம் புகையிரத வண்டிகளில் மிக கேவலமான முறையில் களவுகள் நடக்கின்றதாம். ருகம ரெயில்வே நிலையத்தில் வைத்து புகையிரதம் கள்ளர்களால் தாக்கப்பட்டதாம் இவ்விதமிருக்க கூடியதாக "வடக்கு மாகாணத்தில் மட்டும்" பயங்கரவாதம் தாண்டவமாடுகிறது என்று கூறுவது எதற்காக? வடக்கிலான களவுகளையும் சில குற்றச் செயல்களையும் கையாளும்போது 'புலிகள் தடுப்புச் சட்டம்' போன்ற சர்வாதிகார சட்டத்தை பிரயோகிப்பது எதற்காக? மாற்றான் பிள்ளை செய்யும் தவறுகளை பெரும் ராஜதுரோகமாக எடுக்கும் இப்பனப்பான்மை ஏன்? தமிழர்களுக்கு எதிரான இன அடக்கு முறையில் இதுவும் ஒன்றா? ஆம்! அதுவேதான் களவுகளையிட்டு அரசாங்கம் ஆழமான அக்கறை கொள்ளவில்லையா? இல்லை, களவுகளை இட்டு அக்கறை கொள்வதானல் வடக்கையும் தெற்கையும் ஒரே தன்மையாக அணுக வேண்டும். வடக்கிற்கு விசேட சட்டம் ஏனைய இடங்களுக்கு சாதாரண சட்டமா? என்று மக்கள் கேட்கிறார்கள். மக்களுக்கு தொல்லை கொடுக்கும், தனிநபர்களின் வாழ்க்கைக்கு வழியாக பிரயோகிக்கும் களவுகளை தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள். இவர்கள் பிடிபடுவதில் அக்கறை செலுத்துகிறார்கள் ஆனல் கள்ளனை பிடி! கள்ளனை பிடி! என்று கூறிக்கொண்டு தாம் அடக்கப்படுவதை தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள்,

# கைதடியில் சாதி அடக்குமுறை

சாதிபாகுபாடு காட்டுவதற்கு எதிராக கைதடி மக்கள் படிப்படியாக போராடி பல வெற்றியையும் பெற்றுள்ளார்கள். சமீபத்தில் தமது கிராமங்களில் உள்ள ஜன சமூக நிலையங்களின் மூலமாக தமது சொந்த தலைமையில் போராடி வருகிறார்கள். தமது பிரதேசத்தில் அடிமை குடிமை முறையை இல்லாமல் செய்வதென்றும், பொது இடங்களில் பூரண சமத்துவத்தை ஏற்படுத்துவது என்றும் சன சமூக நிலையத்தில் தீர்மானித்துள்ளார்கள் இதன் அடிப்படையில் செயல்பட்டும் வருகிறார்கள். சமூக மாற்றத்தை புரிந்துகொள்ள மறுக்கும் உயர்சாதியைச் சேர்ந்த சிலர் இவர்களின் இந் நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார்கள் அவர்கள் சாதி அமைப்பை பாதுகாப்பதற்காக தமது சாதியை சேர்ந்தவர்களை அணிதிரட்டி வருகிறார்கள். இவ்விரு சாதிப்பிரிவினர் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இப் பிரச்சனையை சுமுகமாகவும், சமாதானமாகவும் தீர்ப்பதற்கு தனது செல்வாக்கை பிரயோகித்து பார்த்தது ஆனல் வெற்றி கிட்டவில்லை. 'அரங்காவல் படை' என்று அழைக்கப்படும் ஸ்தாபனத்தின் மூலம் சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். ஆனல் அது வெற்றிபளிக்கவில்லை. கூட்டணியின் முக்கிய புள்ளிகளின் மனதை இவ் உண்ணாவிரோதப் போராட்டம் மாற்றவில்லை. அவர்கள் சாதி அடக்கு முறையை பாதுகாக்கும் முயற்சியில் வேகமாக ஈடுபட்டார்கள். இதில் கூட்டணியால் நியமிக்கப்பட்ட சமாதான நீதவானும் ஒருவராவார். இவர் சாதி அடக்குமுறையின் தலைவர்களில் ஒருவராவார். தமிழர் விடுதலை கூட்டணியால் இவரை இதுவரை தண்டிக்க முடியவில்லை. இவரின் ஜே. பி. பதவியை பறிக்க வேண்டும் என்று மக்கள் கூட்டணியை கோரியுள்ளார்கள். சாதி அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் விட்டுக்கொடுக்காத நிலையை எடுக்கும் இம்மக்களின் உறுதியை கண்டு பயந்த சாதி வெறியினர் தமது கடைசி ஆயுதத்தை பாவிக்க தயாராகி வருகிர்களாம்' இது நடக்குமானல் போராட்டம் மிக உயர்ந்த கட்டத்தை எய்தும். (அடக்கப்பட்ட சாதியை சார்ந்த இம் மக்கள் 'உயர் சாதியினரின்' தோட்டங்களையே நந்தகைக்கு எடுத்து செய்து வருகிறார்கள். இக் குத்தகை காணியை விட்டு எழுப்புவதே இவர்களின் உயர்ந்த கட்ட நடவடிக்கையாகும்.) இவர்களின் போராட்டத்தை விடிவு ஆதரிக்கின்றது.

# உலக செய்தி

## நமீபியாவில் கறுப்பர்கள்

தென் ஆபிரிக்க வெள்ளை அதிகாரிகளின் அடக்கு முறையின் கீழ் இருக்கும் நமீபியாவில், நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்வோர்களின் மொத்த எண்ணிக்கை 10,000 ஆகும். இதில் 96% கறுப்பு நிறத்தவர்கள். ஆனல் மொத்த சம்பளம் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையில் 6:1 என்ற வீதத்தில் பங்கிடப்படுகின்றது.(1973 புள்ளி விபரப்படி) 1962ல் வெள்ளையர்களின் தலா வருமானம் 1512 ரூண்ட் ஆகவும், கறுப்பர்களினது 17 ரூண்ட் ஆகவும் இருந்தது. நமிபியாவின் 2/3 பகுதியை உள்ளடக்கியுள்ள தென் பகுதியிலேயே வெள்ளையர்கள் வாழ்கிறார்கள். மொத்த கறுப்பர்களில் 30% வீதத்தினர் இந்த நறைபாகவே இந்த வாழ்கிறார்கள். இப்பகுதியிலேயே ஏறத்தாள சகல மூல வளங்களும், மிருக வளர்ப்பும் இரத்தின கல் அகழ்வும், நகரங்களும், தொடர்பு மையங்களும், துறைமுகங்களும் அமைந்துள்ளன. மீதமான 1/3 பகுதியில் 70% மான கறுப்பர்கள் வாழும் இடத்தில் சிறு அளவு உற்பத்தியும் சோளன் வரகு போன்ற பைபிர்ச் செய்கையும் நடைபெறுகிறது.

**தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனுக்கு நான் எழுதும் கடிதம் 3

அன்பின் நண்பா.

மே மாதம் மறைந்து விட்டாலும், மே தின அமர்க்களத்தைத் தேர்தல் ஆரவாரம் மூழ்கடித்து விட்டாலும், மே தின கொண்டாட்டத்தைப் பற்றி உன்னிடம் கூறுவதற்கு பல விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

மே தினக் கூட்டத்தில் 'அமிர்' பேசிய பேச்சைக் கேட்டாயா? 'சிங்கள மக்களுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் எதுவித வேறுபாடும் கிடையாது: இருவரது பிரச்னைகளும் ஒரே மாதிரியானவை'' என்று கூறும் பெருந்தேசிய வாதத்தின் அடிவருடிகள் ஒத்துக் கொள்ளாத ஒரு விடயத்தை; ''சிங்களவர்கள் ஆள்கிறார்கள், தமிழர்கள் ஆளப்படுகிறார்கள்'' ''சிங்கள ஏகாதிபத்தியம் சுரண்டுகிறது. தமிழ் பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுகிறது'' என்றெல்லாம் கூறித் திரியும் குறுகிய தேசியவாதிகள் ஒத்துக்கொள்ளாத ஒரு உண்மையை; இதுவரை தானே ஒத்துக்கொள்ளாத ஒரு பேருண்மையை முதற்தடவையாக அவர் ஒத்துக் கொண்டார்.

''...சிங்கள மக்களும் சுரண்டப்படுகிறார்கள், ஆனால் சிங்கள மக்களுக்கு இல்லாத பிரத்தியேகமான மற்றொன்றுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்து வருகிறார்கள். அதாவது சுரண்டலுக்கு முகம் கொடுக்கும் அதே சமயத்தில் தேசிய இன ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி வருகிறார்கள்'' என்று அவர் கூறியதன் மூலம் சிங்கள மக்கள் தமிழ் பேசும் மக்களை ஆளவில்லை ஆளும் மக்கள் மத்தியிலுள்ள ஆளும் கும்பல்தான் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் அடக்கி ஆள்கிறது என்ற சரியான கருத்தையும், அதே சமயம் தேசிய ஒடுக்குமுறை ஒன்று நிலவுகிறது என்ற உண்மையையும் ஒத்துக் கொண்டுள்ளார். அவர் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு நம்பத்தகாத, உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் முதலாந்தர எதிரியாம், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை நம்புகிறார். அதன் ஏஜெண்டுகளுடன் கூட்டு சேருகிறார் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க இவ்வாறு கூறியதற்காக நாம் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது

## அமிர் கூறிய உண்மை

இனியாவது அவர் ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை, சிங்கள மக்கள் நடாத்தும் போராட்டங்களுடன் இணைத்து முன்னெடுத்துச் செல்வாரானால் வரலாறு அவரை வாழ்த்தும்.

ஆனால் அவர் அதற்கு தயாரில்லை என்பதை அதே மேடையில் பேசிய அடுத்த பேச்சாளர் நிரூபித்து விட்டது. ''எமது அடுத்த மேதினத்தை தமிழீழத்தில் கொண்டாடுவோம்'' என்று அவர் கூறியது எதனைக் காட்டுகிறது? தமிழ் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு தனது கையாளாகத்தனத்தை மூடிமறைக்க முயல்கிறார் என்பதைத்தானே! எந்த ஒரு உருப்படியான செயற்திட்டமும் இன்றி இவ்வாறு வாய்வீச்சி காட்டுவதைக் கண்டு நான் அஞ்சுகிறேன்... இத்தகைய வாய்ப்பந்தல்கள் சிங்கள மக்களின் தேசிய தப்பெண்ணங்களைப் புண்படுத்தி அவர்களைச் சீற்றம் கொள்ளச் செய்துவிடுமே என்பதற்காக மாத்திரமல்ல. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ''தானாக ஒரு தமிழீழமும் உருவாகும்'' என்ற போலியான நம்பிக்கையை உருவாக்கி போராட்ட உணர்வை மழுங்கடிக்கச் செய்துவிடுமே என்பதற்காகவும் தான்.

இவரது வாய்மந்திரத்தால் ''உலகத் தமிழருக்கு ஒரு நாடு'' உருவாகி விட்டது. ''யாழ்தேஷ்'' தோன்றி விட்டது. இனி ''தமிழீழம்'' உருவாகப் போகிறது ...இந்த உண்மை பீத்தல் வாய்ச்சவடால்களை விட்டுவிட்டு பறிபோகும் பிரதேச எல்லைகளைப் பாதுகாக்கவாவது முயல வேண்டாமா? பிரதேசம் பறிபோவதைத் தடுக்க ஏதாவது உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமா? சிறையிலே வாடும் தமிழ் இளைஞர்களை மீட்பதற்கு எந்தப் போராட்டத்தையும் காணோம்... கற்பனையில் தமிழீழத்தையும் கனவு காணும்படி மக்களுக்குப் போதை ஊட்டுகிறார்.

தலைநகரத்தில் நடைபெற்ற மேதின கொண்டாட்டங்களைப் பார்த்தாயா? ''தேசிய ஐக்கியத்'' தைப் பற்றி பேசாத தலைவர்களே இல்லை. தர்மிஷ்டர் அரசாங்கம் ஒரு படி மேலேபோய் ''ஐக்கிய இலங்கையை''க் கட்டி எழுப்புவதாக மேதினத்தில் சூழுரைத்தது. (இந்த பயங்கரமான ஐக்கியத்தில் இருந்து தமிழ் பேசும் மக்களை தமிழ் பேசும் மக்கள் காப்பாற்றிக் கொள்வாராக!)

சகல தேசிய இனங்களும் உரிமையில் சமமானவை, எந்த தேசிய இனத்திற்கும் விசேட சலுகைகள் எதுவும் கிடையாது. ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவும், பிரிந்து சென்று தனி நாடாக அமைபவும் உரிமை உண்டு. இந்த உரிமைகள் வானத்தில் இருந்து விழுந்தவை அல்ல. வரலாற்றுரீதியில் போராடிப் பெறப்பட்டவை.

தேசிய இனங்களுக்குரிய இந்த பிறப்புரிமைகள் ஒரு புறம் இருக்கட்டும். அடிப்படை மனித உரிமைகளே மறுக்கப்படும் நிலையில், வித விதமான அடக்குமுறைச் சட்டங்களாலும், நவீன ஆயுதம் தரித்த முப்படை, பொலீஸ் பலத்தாலும் பிரதேசிய இனங்களின் கழுத்தை நெறித்துக் கொண்டு ஐக்கியத்தைப் பற்றி பேசினால் அந்த காட்டுமிராண்டித்தனமான ஐக்கியத்தை நாய்கூட எதிர்க்கும்.

பிரிந்து போவதற்கு உரிமையுள்ள நிர்ப்பந்தமற்ற ஜனநாயகம் உள்ள சூழலில் சர்வ சமத்துவம் நிலவும் போது தான் உளப்பூர்வமான ஐக்கியம் ஏற்பட முடியும். அத்தகைய ஐக்கியத்தையே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களும் மனிதாபமுள்ள ஜனநாயக சக்திகளும் கோருகின்றன. அதைவிடுத்து ''ஐக்கியம்'' என்ற கவர்ச்சியான கோஷத்தின் பின்னால் பலவந்தமான ஒற்றையாட்சியையும்'' ''அடக்குமுறையும்'' நிலை நிறுத்த முயல்வது பெருந் தேசியவாதிகளின் கடைத்தனமல்லவா?

இவர்கள் கூறும் இந்த ஐக்கியம், தூக்கிலிடுவோனுக்கும் தூக்கிலே தொங்குவோனுக்கும் இடையே நிலவும் ஐக்கியம்; கசாப்புக் கடைகாரனுக்கும் பலிக்கடாவுக்கும் இடையிலான ஐக்கியம். இந்த ஐக்கியத்தின் உண்மையான உள் அர்த்தம் ''அடிமைத்தனம்'' என்பதன்றி வேறெதுவும் இருக்க முடியாது. இத்தகைய ஐக்கியங்களை எதிர்த்து மே தினத்தில் எந்த ஒரு கோஷத்தையும் காணோம். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அங்கு எந்த தலைவரும் நேர்மையாகக் குரல் எழுப்பவில்லை. அத்தகைய ஒரு மேதினம் வராமல் போய்விடுமா என்ன? ஒன்று மட்டும் உண்மை.

''எந்த ஒரு தேசிய இனமும் தனது தலைவிதியைத் தானே நிர்ணயித்துக் கொள்வதற்கு உறுதி பூண்டு தனது சொந்தக் காலில் தங்கிநின்று போராடத் துணிந்து விட்டால் எந்த பூகம்பத்திற்கும் முகம் கொடுக்கலாம்.''

வணக்கம்

இப்படிக்கு,

**கணேஷ்**

---

# மலையகத்தில் திட்டமிட்ட குடியேற்றம்

# மற்றொரு ரொடீசியா உருவாக்கப்படுகின்றது

''கிராமியப் படுத்தல்'' அதாவது கிராமங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நீக்கி தேசிய ஒருமைப்பாட்டை intergration) ஏற்படுத்துவது என்ற கவர்ச்சியான சுலோகத்திற்குப் பின்னால் கபடத்தனமாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை அமைத்து இனவாதத்தைத் தூண்டி விட இவ் அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

இதன்படி தோட்டப் பகுதியில் திட்டமிட்ட சிங்களக் கிராமங்களை உருவாக்கவும், நிர்வாகத்துறைக்கு சிங்களவரை நியமிக்கவும், தொழிலாளர் வெற்றிடங்களை கிராமபுற சிங்களவரைக் கொண்டு நிரப்பவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இத் திட்டத்தினால் ஏற்படப் போகும் பல தீய விளைவுகளை இந்த ''விடிவு'' முன்கூட்டியே சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இதுவரை தோட்டப் பகுதியின் நிர்வாகத்துறையில் தோட்டத் தொழிலாளருடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட கங்காணி, சுப்பர்வைசர், கணக்கப்பிள்ளை, ஸ்டோர் கீப்பர் போன்ற உத்தியோகத்தர்கள் தமிழர்களாகவே இருந்தனர். இதனால் இவ்விரு தரப்பினருக்கும் இடையே ஏற்படும் தகராறு நிர்வாகத்திற்கும் தொழிலாளருக்கும் இடையே ஏற்படும் தகராறாகவே இருந்து வந்தது. அதற்கு ''இனவாதச் சாயம்'' பூச வழி இருக்கவில்லை. இனி இத்தகைய நிர்வாக உத்தியோகங்களில் சிங்களவர் அமர்த்தப்படும் போது நிர்வாகத்திற்கு எதிராக தோ. தொழிலாளர் நடத்தும் போராட்டங்கள் சிங்களவர்கு எதிராக தமிழர் நடாத்தும் இனவாதப் போராட்டமாக வெளி உலகிற்குக் காட்டப்படும்.

இதனால் தோ. தொழிலாளர்களின் நியாயமான போராட்டங்களை இனவாதத்தைக் கிளப்பி முறியடிக்கக் கூடிய வாய்ப்பு நிர்வாகத்திற்குக் கிடைக்கிறது.

அது மாத்திரமல்ல தோட்டத் துறையில் ஈடுபடுத்தப்படும் சிங்களத் தொழிலாளரைக் கூட நிர்வாகம் தனது கைக் கருவியாக மாற்றி தமிழ் தோ. தொழிலாளருக்கு எதிராகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். எவ்வாறெனில், தோட்டத்துறையில் சில சுலபமான வேலைகள்'' (easy jobs) உண்டு. பாதையின் கரைகளை வெட்டுதல், துரை பங்களாவில் வேலை செய்தல், தொழிற்சாலையில் பணியாற்றுதல் போன்ற வேலைகள் இப்பிரிவிலே அடங்கும். இதைத் தவிர சில'' சலுகைப்பெற்ற'' வேலைகளும் உண்டு. உதாரணம் புல்லு வெட்டி சுத்திகரிப்பதற்கு ''கொண்ட்ராக்ட்'' (குத்தகை) கொடுப்பதைக் கூறலாம். சிங் தொழிலாளரை சிறிய அளவில் ஒவ்வொரு தோட்டத்திலும் வேலைக்கமர்த்தி வசதியான வீடுகளை அமைத்துக் கொடுத்து

(4ம் பக்கம் பார்க்க)

**சுதந்திரமான வாழ்க்கையே பூரணத்துவ வாழ்க்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை இயக்க வரலாறு 3

# ஸிம்பாபே விடுதலை இயக்கம்

ஞேடிசியாவுல் உள்ள வெள்ளையர்கள் அங்குள்ள பெரும்பான்மையினரான சிம்பாபாவினரை (கறுப்பு நிரத்தவர்கள்) சுமார் 40 வருடங்களாக அடக்கியும் மிக பின் தங்கிய நிலையில் வைத்தும் வருகிறார்கள். வெள்ளையர்கள் அவர்களை எதுவித வெளி தொடர்பும் இல்லாதவர்களாக்க சகல முயற்சியும் எடுத்தார்கள். உள்நாட்டில் உழைக்கும் மிருகங்களாகவும் சமூக உரிமை எதுவும் இல்லாதவர்களாக நடத்தியும் வந்தார்கள். மிருகங்கள் கூட அடிமை வாழ்வை எதிர்க்கும் போது உழைக்கும் மனிதர்கள் அதை சகிப்பார்களா? மாட்டார்கள். சிம்பாபாவே மக்களும் சகித்திருக்கவில்லை. போராடினார்கள். சிறு, சிறு அளவில ஒழுங்கான தலைமையின்றி, பல வித தவறான போராட்ட மார்க்கங்களை பின்பற்றினார்கள். வெள்ளையர்கள் அமெரிக்க உதவியுடன் அவர்களை அடக்க எடுத்த ஒவ்வொரு முயற்சியும் அவர்களை மேலும் ஒருபடி முன்னோக்கி தள்ளியது. அமெரிக்காவையும் எதிர்க்கும் அளவிற்கு அவர்கள் முன்னேறினார்கள். எங்கெல்லாம அடக்குமுறை உண்டோ அங்கெல்லாம் போராட்டமும் நிச்சயம் எழவே செய்யும். கறுப்பர்களை மனிதர்களாகவே மதிக்க மறுத்த வெள்ளையர் ஆட்சி 1978 ஆகஸ்டில் 'இனப் பாகுபாடு தடுப்பு சட்டத்தை' ஆக்கியது. 1979 ஜனவரி 20ல் நகல் அரசியல் யாப்பை வகுத்து அதை அடிப்படையாக கொண்டு கறுப்பர்களை கொண்ட பாராளுமன்றத்தையும் அமைத்தது. ஆனால் மக்கள் ஏமாறவில்லை. எலும்புத்துண்டுகளின்மேல் நம்பிக்கை வைக்கவில்லை, தற்காலிக பிரச்சினைகளின் தீர்வுக்காக அடிப்படை உரிமையை அடகு வைக்கவில்லை. அவர்களின் இந்த உறுதியின் காரணத்தால் வெள்ளைப் பொம்மை ஆட்சியை ஐ. நா. சபைகூட ஆதரிக்கவில்லை.

சிம்பாபாவே மக்களின் இந்த வெற்றிக்கான காரணம் என்ன?

(1) அவர்கள் தமது விடுதலைக்காக தமது சொந்த காலில் தங்கி நின்றார்கள். 'சிம்பாபாவே தேச பக்த முன்னணி'யின் கீழ் தம்மை அணிதிரட்டி இருந்தார்கள். இது பாராளுமன்றத்துக்கு செல்லவோ அல்லது எதிர் கட்சி அசனங்களை கைபற்றவோ அமைக்கப்பட்ட கூட்டணி அல்ல. ஆயுதப் போராட்டத்தை நடாத்துவதற்காக அமைக்கப்பட்டதாகும். அந்நியப்படையை வரவழைத்து அவர்களின் மூலம் ஆயுத போராட்டத்தை நடாத்த நினைக்கவில்லை. வெள்ளையர்களின் ஆயுதத்தை பறித்து அதன் மூலமே யுத்தத்தை நடாத்தினார்கள். ''சிம்பாபாவே மக்கள் இராணுவம்'' என்ற படைப்பிரிவை அமைத்தார்கள். ''சிம்பாவே மக்கள் இராணுவம்'' செய்த காரியங்கள் சில;-

(அ) சிம்பாபாவேயின் கிழக்கு வடக்கு-கிழக்கு தென் கிழக்கு பகுதிகளில் விடுதலைப் பிரதேசங்களை அமைத்தது.

(ஆ) ஞேடிசியாவின் ஏறத்தாள 2/3 பகுதியில் ஆதிக்கம் வாய்ந்த சக்தியாக மாறியுள்ளது.

(இ ஞேடிசிய அரசாங்கத்திற்கு ஒவ்வொரு நாளும் சராசரி 10 லட்சம் டொலர் நட்டத்தை ஏற்படுத்திவருகிறது.

(ஈ) 1975ல் 3 லட்சமாக இருந்த வெள்ளையர்கள் 2978ல் சுமார் 1 2/1 லட்சமாக குறைந்துள்ளது. (பயத்தால் வெளியேறி வருகிறார்கள்).

(உ) 1978 டிசம்பரில் 20 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமானமுள்ள 73 லட்சம் லிட்டர் எண்ணெயை எரித்தது.

சாம்பியா, மொஸாம்பிக் போன்ற அந்நிய நாடுகளுடன் உறவு கொண்டு அங்கு தமது இராணுவ தளங்களை அமைத்துள்ளார்கள். அந்நாடுகளில் உள்ள தமது நண்பர்களையும் உள்ளடக்கி 'சிம்பாபாவே தேசிய யூனியன்' என்ற ஸ்தாபனத்தை உருவாக்கியுள்ளார்கள். இதன் மூலமாகவே உலக அரங்கத்திற்க் தமது பிரச்சனையை முன்வைத்துள்ளார்கள். வெளியாரின் ஆதரவு அவர்களுக்கு இரண்டாவது பிரச்சினை, விடுதலை இயக்கத்தின் முழு வேலையும் அதுதான் என்று அவர்கள் கருதவில்லை அவர்களின் இன்றைய நிலை என்ன?

ஏனை சுதந்திரமே அவர்களின் கோரிக்கையாகும். அதற்காக அவர்கள் தற்காலிக சமாதானத்திற்கு செல்ல தயாராய் உள்ளார்கள். இத் தற்கால ஓய்வின் மூலம் தமது படைப் பிரிவை பெலப்படுத்துவலே அவர்களின் நோக்கம். நிச்சயமாக அவர்கள் வெல்லுவார்கள். ஏனெனில் அவர்கள் படையில்லா தலபதிகளும் அல்ல, வாய்ப்பந்தல் போடும் வாதவர்களும் அல்ல.

-லோகன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

A. லோரன்ஸ்,
33, பார்க் அவெனியு
கொழும்பு-8.

## களனிப் பல்கலைக் கழக

## தமிழ் மாணவர்களின் நிலை

தமது தாய் மொழி மூலம் பல்கலைக் கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக களனிப் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் விடிவுக்கு அறிவித்தார். தமது நிலை பற்றி மேலும் விளக்கி கூறும் போது தமது மொழி கலை, கலாசார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியாமலும் வருடா வருடம் நடத்தும் பிரியாவிடை போன்ற வைபவங்கள் கூட வைப்பதற்கு அனுமதியாத சிங்கள மாணவரோடு ஒன்றிணைந்து வைக்கும்படி தற்போது வற்புறுத்தப்படுவதாகவும். பல்கலைக் கழக நிருவாகத்தின் அறிவித்தல்கள் தாவல்கள் சிங்கள மொழியில் மட்டும் வெளியிடப்படுவதால் மாணவர்கள் சில காரியங்களை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாமல் சிரமப்படுவதாகவும் மற்றும் நூல் நிலையத்தில் போதிய தமிழ் நூல்கள் இன்மை பல்கலைக் கழக வெளியீட்டுவைகையில்தானும் தமிழ் மொழியில் எழுதப்ப வில்லையென அவர்கள் கூறினர். இவ்விதம் தமிழ் மாணவர்களின் தார்மீக உரிமை மறுக்கப்படுவதை ''விடிவு'' கண்டிப்பதோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றது.

## பொல்பெட்டின் அரசை அங்கீகரி

கொழும்பில் நடந்த அணி சேரா அமைச்சர்கள் மகாநாட்டில் கம்பூச்சியா பிரச்சினை சர்ச்சைக்குரிய ஒன்றாக காணப்பட்டது வாசகர் அறிந்ததே. அதே நேரத்தில் ஐ. நா. சபையை உட்பட உலக நாடுகள் அங்கீகரிக்கும் பொல் பொட்டின் தலைமையிலான கம்பூச்சியாவை வியட்நாம் ரஷ்ய ஆதரவுப்படைகளுடன் கெங்சமரின் என்ற அநாமதேய பேர்வழி ஆட்சியை கவிழ்த்ததையும் வாசகர்கள் அறிவர். விடிவும் ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் ஏனைய நாடுகளோ, ஏகாதிபத்தியங்களோ தலையிடுவதை வன்மையாக கண்டிக்கின்றது. கம்போடியாவின் நீதியான அரசாங்கத்தை அதாவது பொல் பெட்டின் இயங்சாரியின் தலைமையிலான ஆட்சியையே அணிசேர கொள்கையில் மாறாத தற்போது கெங் சமரினைவிட பெரும் கிராம பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்கும் பொல் பொட் பெட்டின் ஆரசையே சட்டரீதியான அரசாக அங்கீகரிக்கும்படி விடிவு கோருகின்றது.

## மலையகத்தில்...

(3ம் பக்கத் தொடர்)

இத்தகைய சலுகைகளைப் பெற்ற ''சுலபமான'' வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் ஒரு சலுகைப் பெற்ற தொழிலாளர் பிரிவை உருவாக்கிக் கொண்டு நிர்வாகம் அவர்களைத் தனது ஒற்றர்களாகவும் போராட்டத்தை முறியடிக்கும் கைக் கருவிகளாகவும் மாற்றி இன மோதல்களை ஏற்படுத்த இயலும்.

தற்போது தோட்டப் பகுதியில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுவது உண்மைதான் ஆனால் வரட்சிகாலங்களில் இயல்பாகவே வேலைக் குறைவாயுள்ளது. இக் காலங்களில் அதிக வேலை நாட்களை திட்டமிட்டே சிங்களவலக்கு வழங்குவதன் மூலம் தேசியத் தப்பபிப்பிராயங்களைத் திட்டமிட்டே வளர்க்கலாம்.

பெருந் தோட்டங்களில் சிங்களவருக்கு திட்டமிட்டு தொழில்வாய்ப்பு கொடுப்பதில் உள்ள ஆபத்து இது என்றால், சிங்களக் கிராமங்களை தோட்டங்களுக்கு மத்தியில் செயற்கையாக உருவாக்குவது இதைவிட பயங்கரமானது. தோட்டப் பகுதியில் சிறு சிறு கிராமங்களை அமைத்து சிங்களவரைக் குடியேற்றுவதால் சிங்கள மக்களின் பிரச்சினை தீரப் போவது இல்லை. மாறாக உக்கிரமடையவே செய்யும். அச் சிறு கிராமங்களில் போதிய வருவாயைப் பெற அவர்களால் இயலாது. எனவே அவர்கள் தகாத வழிகளில் ஈடுபடுவர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவர்.

தாம் நிலம் இன்றி சிரமப்படுவதற்கும் தொழில் இன்றி கஷ்டப்படுவதற்கும் தோட்டத் தொழிலாளர் மலையகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதே காரணம் என்ற தப்பபிப்பிராயம் இப் பகுதியில் வசிக்கும் சிங்கள மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது, எனவே தோட்டப் பகுதியில் இனவாதம் கிளப்பப்படும் போது அதன் முன்னணிப்படையாக இவர்கள் செயற்படுவதற்கு வாய்ப்பு உண்டு.

எவ்வாறாயினும் இத் திட்டம் அமுலானல் மலையகம் ஒரு மினி ரொடீசியாவாக மாறவே செய்யும். எவ்வாறு பெரும்பான்மை கறுப்பு மக்களை சிறுபான்மை வெள்ளையர் நிர்லாகத் துறையிலும் இராணுவ அரசியல் துறையிலும் செல்வாக்கு செலுத்திக் கொண்டு அடக்கி ஆள்கிறார்களோ அதே போல் ஒரு நிலைமை மலையகத்திலும் உருவாக்கத்தான் போகிறது. சுருக்கமாகச் சொன்னால் இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தோட்டத் தொழிலாளரின் மலிவான உழைப்புச் சக்தியை நிரந்தமாகப் பெறுவதே இதன் சாராம்சமாகும்.

## பின்னோக்கிப்..

(1ம் பக்கத் தொடர்)

விடிவு ஒரு வெகுஜனப் பத்திரிகையாகும். அது ஏகாதிபத்திய விரோத, இன அடக்கு முறைக் கெதிராக, ஜனநாயக விரோத அரசியலுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும்.

தற்போது விடிவு நான்கு பக்கங்களுடனேயே வெளிவருகின்றது. இதில் நாட்டின் சகல பிரச்சினைகளையும் வெளிநாட்டு, சகல இனங்களினதும் வர்க்கங்களினதும் விருப்பங்களை பூர்த்தி செய்ய முடியாது. சகல பிரதேச மக்களின் பிரச்சனைகளையும் பூரணமாக உள்ளடக்க முடியாது. எனவே வெகு விரைவில் பத்திரிகையின் பக்கங்களை அதிகரிக்க முயற்சிக்கின்றோம். இம் முயற்சிக்கு வாசகர்களும் ஆதரவாளர்களும் எம்மோடு ஒத்துழைப் பார்களென எதிர்பார்க்கின்றோம்,

''விடிவு'' 1979 ஜூன் கொழும்பு 2, 50, மலே வீதியிலுள்ள ராஜமணி அச்சகத்தில், ஹொரவிதோழு தளவாக் தொலைவைச் சேர்ந்த அ. லோறன்ஸ் அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org